www.Padasalai.Net www.Trb Tnpsc.com

வகுப்பு : 8

தேர்வு எண்

# ஆண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

நேரம் : 2.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15X1=15

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் --------
(அ) மரபு (ஆ) பொழுது (இ) வரவு (ஈ) தகவு
2. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
(அ) கயிற்றுக்கட்டில் (ஆ) கயிர்க்கட்டில் (இ) கயிறுக்கட்டில் (ஈ) கயிற்றுக்கட்டில்
3. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ---------
(அ) வலிமையற்றவர் (ஆ) கல்லாதவர் (இ) ஒழுக்கமற்றவர் (ஈ) அன்பில்லாதவர்
4. பள்ளிக்குச் சென்று கல்வி --------- சிறப்பு.
(அ) பயிலுதல் (ஆ) பார்த்தல் (இ) கேட்டல் (ஈ) பாடுதல்
5. 'கனத்த மழை' என்னும் சொல்லின் பொருள் -----------
(அ) பெருமழை (ஆ) சிறுமழை (இ) எடைமிகுந்த மழை (ஈ) எடை குறைந்த மழை
6. செவ்விந்தியர்கள் நிலத்தைத் --------- மதிக்கின்றனர்.
(அ) தாயாக (ஆ) தந்தையாக (இ) தெய்வமாக (ஈ) தூய்மையாக
7. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் --------- தகுதி அறிந்து பேச வேண்டும்.
(அ) சொல்லின் (ஆ) அவையின் (இ) பொருளின் ஈ) பாடலின்
8. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் ---------
(அ) தொல்காப்பியம் (ஆ) அகநானூறு (இ) புறநானூறு (ஈ) சிலப்பதிகாரம்
9. 'மலர் பானையை வனைந்தாள்' - இத்தொடர் --------- பொருளைக் குறிக்கிறது.
(அ) ஆக்கல் (ஆ) அழித்தல் (இ) கொடை (ஈ) அடைதல்
10. கற்றவருக்கு அழகு தருவது --------
(அ) தங்கம் (ஆ)வெள்ளி (இ) வைரம் (ஈ) கல்வி
11. அயோத்திதாசர் நடத்திய இதழ் ----------
(அ) ஒருபைசாத் தமிழன் (ஆ)காலணாத் தமிழன்
(இ) அரைப்பைசாத் தமிழன் (ஈ) அரையணாத் தமிழன்
12. அடுத்தவர் வாழ்வைக் கண்டு --------- கொள்ளக்கூடாது.
(அ) உவகை (ஆ) நிறை (இ) அழுக்காறு (ஈ) இன்பம்
13. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ---------
அ) இராதாகிருஷ்ணன் ஆ) அம்பேத்கர் இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு
14. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----------
அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்
இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்
15. விகாரப் புணர்ச்சி -------- வகைப்படும்.
அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 6X2=12

16. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
17. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?
18. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
19. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
20. பண்பு, அன்பு ஆகியவைப் பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
21. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
22. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?
23. இன்றைய கல்வியின் நிலைப் பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 4X2=8

24. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
25. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
26. கலைச்சொல் எழுதுக.
அ) Leadership ஆ) Constitution
27. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

28.இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

29.சுற்றுச்சூழலை பாதுகாக்க உங்கள் பொறுப்புகள் இரண்டு எழுதுக. www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**IV. அடிபிறழாமல் எழுதுக.** 4+2=6

30.“கற்றோர்க்குக்” எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடலை எழுதுக.

(அல்லது)

“வழிவர்”- எனத் தொடங்கி “இன்றியே” என முடியும் படைவேழம் பாடலை எழுதுக.

31.‘இதனை’ – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்** 4x4=16

32.புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

33.பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

34.கல்லாமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

35.வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

36.வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

37.மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

**VI.விரிவான விடையளிக்கவும்:** 2x6=12

38.அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

39.அ) துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ளவேண்டிய நற்பண்புகள் யாவை?

(அல்லது)

ஆ) மனிதர்கள் வளர்க்கவேண்டிய பண்புகளாகவும் விலக்க வேண்டிய பண்புகளாகவும் நீங்கள் கருதுவன யாவை?

**VII.விரிவாக விடையளிக்கவும்:** 1x8=8

40.அ) ‘வெட்டுக்கிளியும் சருகுமானும்’, கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**VIII.கட்டுரை எழுதுக.** 1x8=8

41. அ) ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
குறிப்புகள் : முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை

(அல்லது)

ஆ) ‘உழைப்பே உயர்வு’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**IX.கடிதம் எழுதுக.** 1x8=8

42.அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**X. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7x1=7

**43.உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.**
‘உடலும் உயிரும் போல’

**44.உரிய இடங்களில் நிறுத்தக்குறியீட்டு எழுதுக.**
தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது.

**45.சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
சோறு -------- (தின் / உண்)

**46.பிழையைத் திருத்தி எழுதுக.**
பானையை உடைத்தது கண்ணன் அல்ல

**47.தொடர் வகையை எழுதுக.**
நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்?

**48.இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.**
மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை

**49.பொருத்தமான சொற்களால் நிரப்புக.**
சிறுமி -------- (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com